**வீதி வலையமைப்பு முன்னேற்ற செயற்திட்டம் (ஆர்என்ஐபீ) - 2013**

---

வீதி வலையமைப்பு முன்னேற்ற செயற்திட்டத்தின் (ஆர்என்ஐபீ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபி) வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் (ஆர்டிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 1999 சனவரி 28 ஆந் திகதிய 1649 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

வீதி வலையமைப்பு முன்னேற்ற செயற்திட்டத்தின் (ஆாஎன்ஐபீ) கடன் உடன்படிக்கையின் படி, வீதி அபிவிருத்தி அதிகார சபை (ஆர்டிஏ) செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராகும். வீதிகள் ஊடறுத்துச் செல்லும் பிரதேசங்களில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு பங்களிப்பை வழங்கப்படுகின்ற பொருத்தமான தந்திரோபாய வீதி வலையமைப்பை வழங்கி பராமரிப்பது செயற்திட்டத்தின் நோக்கமாகும். , இந்த நோக்கத்திற்கு மேலதிகமாக, ஏனைய நோக்கங்களாக, குறிப்பாக கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகளை விரைவாக மறுசீரமைப்பை இயலச்செய்யும் முகமாக வெள்ளத்தினால் சேதமாக்கப்பட்ட உட்கட்டமைப்பிற்கான அரசாங்கத்தின் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவியளிப்பதாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,564 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 92.5 மில்லியனிற்கு சமனான ரூபா 6,933 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது . செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 1998 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2008 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்டது. பின்னர் கடனளிக்கும் முகவர் செயற்திட்டத்தின் காலப்பகுதியை 2009 ஏப்ரல் வரை நீடித்திருந்தார் எனினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்தின் நிதிகளைப் பயன்படுத்தி 2013 திசெம்பர் 31 வரை தொடர்ந்திருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களிற்கிணங்கத் தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்**.**

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

---

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களிற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 3. அபிப்பிராயம்

------------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 11,043,208 தொகையாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 17,606,263,855 தொகையாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவைடைந்த ஆண்டு | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் (கழித்தெழுதப்பட்ட பெறுமதி) (ஆர்டிஏக்கு மாற்றப்பட்டது) | - | - | 12,435 |
| பூர்த்தி செய்யப்பட்ட சிவில் வேலைகள் | 4,958,336 | 308,848,100 | 14,452,576,790 |
| நடைபெறும் வேலைகள் | 3,773,224 | - | 2,412,416,045 |
| செயற்திட்ட நிருவாகம் | - | (280,333,708) | 671,845,522 |
| காணி சுவிகரிப்பு | 2,311,648 | 1,928,023 | 69,413,063 |
| | 11,043,208 | 30,442,415 | 17,606,263,855 |

### 4.2 கட்டுநிதி நிதியம்

இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 2009 ஏப்ரல் 30 வரை இரண்டு கட்டுநிதி நிதியம் கணக்குகள் செயற்படுத்தப்பட்டன. அதன் பின்னர் வெளிநாட்டு நிதிகள் எதுவும் கிடைத்திருக்காததுடன் அன்றிலிருந்து கட்டு நிதி நிதியக் கணக்கில் மீதியெதுவும் இருக்கவில்லை.

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 திசெம்பர் 31 இல் அதன் நடவடிக்கைகளைச் செயற்திட்டம் முடிவுறுத்திய போதிலும் செயல் திட்ட காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 62,425,145 கிரயத்திற்கான நிலையான சொத்துக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றுவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதே நேரம் கட்டு நிதியைத் தீர்ப்பதற்கான

காலப்பகுதி 2009 ஏப்ரல் 09 இல் முடிவடைந்திருந்தது. மேலும், ரூபா 13,189,007 பெறுமதியான செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்கள் செயற்திட்ட நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்காக நிறுவனங்களின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஒரு வெளிநாட்டு பிரயாணத்திற்காக 2010 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 233,500 தொகை முற்பணங்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தீர்க்கப்படாதிருந்தன. மேலும், ஆதனங்களை சேதமாக்குவதில் மூன்றாம் தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 113,977 கோரிக்கைகளும் 5 ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாதிருந்தது.

## 6. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி செயற்திட்டத்தின் நிதியளிப்பு பாதீட்டு ஏற்பாடு, மற்றும் மீளாய்வாண்டு மற்றும் மீளாய்வாண்டு இறுதி வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டின் நிதிகளின் பயன்பாடு | 2013 திசெம்பர் 31 இல் பயன்படுத்திய தொகை |
|---|---|---|---|---|---|
| | ஐ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 92.5 | 6,933 | - | - | 9,629 |
| இலங்கை அரசாங்கம் | - | 2,631 | 13.1 | 11.3 | 7,977 |
| மொத்தம் | 92.5 | 9,564 | 13.1 | 11.3 | 17,606 |

### 6.2 வீதி முன்னேற்ற நோக்கங்களிற்காக காணிகளின் சுவீகரிப்பு

காணிகளின் சுவீகரிப்பு நடவடிக்கைகள் முறையான திட்டங்களின்மை காரணமாக நேர காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வீதி நிர்மாணத்திட்டத்தின்படி, செயற்திட்டத்தின் கீழான வீதிகளின் முன்னேற்ற நோக்கத்திற்காக 18,688 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 2013 திசெம்பர் 31 வரை 18,638 காணித்துண்டுகளே சுவீகரிக்கப்பட்டன. இந்த காணித்துண்டுகளில், 12,204 காணித்துண்டுகள் மாத்திரம் காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(ii) செயற்திட்டத்தின் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக தரப்பட்ட தகவல்களின்படி காணிச் சீகரிப்பு மற்றும் மீள் குடியேற்ற குழுவில் (எல்ஏஏஆர்சீ) எடுக்கப்பட்ட தீர்மானங்களின் கீழ் நட்டவீடாக ரூபா 2,261,397,428 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், ரூபா 128,962,516 கூட்டுமொத்தத் தொகையான நட்டவீட்டுக் கொடுப்பனவில் தாமத்திற்கான வட்டியாக 2013 திசெம்பர் 31 வரை 12,641 காணித்துண்டுகள் சார்பாக செலுத்தப்பட்டிருந்தது. எனவே செயற்திட்டமானது நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளை தீர்ப்பதில் மேலதிகக் கிரயத்தை தவிர்க்கும் வகையில் அந்த அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

(iii) தரப்பட்ட தகவல்களின் படி, காணி சுவீகரிப்புக்களில் முரண்பாடுகள் காரணமாக நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **வீதி** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முரண்பட்ட மற்றும் நட்டஈட்டிற்காக காணித்துண்டுகளின் எண்ணிக்கை** |
|---|---|
| கட்டுகஸ்தோட்ட குருநாகல் | 39 |
| பாணந்துறை - இங்கிரிய | 05 |
| அம்பலாங்கொடை – எல்பிட்டிய | 04 |
| பஸ்யால – (மிரிகாம) | 07 |
| கட்டுகஸ்தோட்ட – வத்தேகம | 14 |
| மொத்தம் | 69 |

## 7. செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுதல்

-----------------------------------------------------------------------------

ஆரம்ப திட்டத்தின்படி, வீதி வலையமைப்பு முன்னேற்ற செயற்திட்டம் ரூபா 7,335 மில்லியன் கிரயத்தில் 261.8 கிலோ மீற்றர் நீளமான 18 வீதிகளை புனரமைப்பதற்காக அமுலாக்கப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைத்த தகவல்களின்படி, செயற்திட்டமானது இலங்கை அரசாங்கத்திளால் வழங்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்தி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழமையான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்னப் பூர்த்தி செய்யப்பட்ட ஏஏ010 கடுகஸ்தோட்ட – குருநாகல் வீதி (37.8 கி.மீ) மற்றும் பீ 205/369 கட்டுகஸ்தோட்ட வத்தேகம வீதி (9.8 கி.மீ) என்பவை தவிர 2012 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 10,625 மில்லியன் கிரயத்தில் 312 கிலோ மீற்றர்கள் நீளமான 23 வீதிகளைப் பூர்த்தி செய்திருந்தது. மேலும், செயற்திட்டத்தின் ஆரம்ப மதிப்பிடப்பட்ட கிரயம் வீதிகளின் முன்னேற்றத்தினுடைய மேலதிக அளவீடுகள் மேலதிக வேலைகள் வேலைகளின் ஏற்ற இறக்கங்கள் போன்றவற்றால் ரூபா 8,042 மில்லியனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. என்று அவதானிக்கப்பட்டது ஆரம்ப ஒப்பந்தக் காலப்பகுதியும் 67 மாதங்கள் வரை நீடிக்கப்பட்டிருந்தது. தகுதி வாய்ந்த சகல செலவுகளும் கோரப்பட்டிருந்ததுடன் 2009 மே மாதமளவில் உசாத்துணையாளர்களால் செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், வீதி அபிவிருத்தி அதிகார சபையானது ஒரு நிறைவேற்றும் முகவராக செயற்திட்டத்தின் கணக்குகளை முடிவுறுத்துவதற்கும், செயற்திட்டத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கையேற்பதற்கும் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.